BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையினர் ஒருவருக்கு கோவிட் -19 தொற்று (COVID-19) இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பது பற்றிய ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்தின் அறிக்கை

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 24, 2020) – இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் சாண்டல்வுட் (Sandalwood) கிளையில் பேருந்து பணியாளர் ஒருவருக்கு கோவிட் -19 (COVID-19) தொற்று இருப்பது பற்றி ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டது..

நகர நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்ட உடனேயே, அதன் பணியாளர்கள் பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பை ஈடுபடுத்தினார்கள்.

தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர், நேற்று ஜூன் 23 ஆம் தேதி காலைப்பொழுதில் 502 ஸூம் மெயின் தடத்தில் பின் வரும் தடங்களில் ஓடிய பேருந்தில் பணியாற்றினார். :

- தடம் எண் 502 ஸூம் மெயின்
- தடம் எண் 511 ஸூம் ஸ்டீல்ஸ்
- தடம் எண் 4 சிங்க்வா கவ்ஸி

பேருந்தை இயக்கிய அந்த நபர் தன்னைத்தானே தனிமைப்படுத்திக்கொள்வார். இந்தச் சமயத்தில், தொற்றுக்கு ஆட்பட்ட அந்த நபர் மற்றும் அவரின் குடும்பத்திற்கு ஆதரவு அளிப்பதுவும் மற்றும் நமது பணியாளர்கள், பயணிகள் மற்றும் சமுதாயத்தினரின், ஆரோக்கியம் மற்றும் மற்றும் பாதுகாப்பினைப் போற்றிக்காப்பதுவும் நகர நிர்வாகத்தின் முன்னுரிமை கொண்ட விஷயமாகும்

மேற்சொன்ன வழித்தடங்களில் ஓடிய பேருந்தில் பயணித்த, நலமாக இருப்பதாக உணருகின்ற, தொற்றுக்கான அறிகுறிகள் இல்லாத, பயணிகள் தங்கள் பணிகளை வழக்கம் போல் செய்யலாம், பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) ஐ அழைக்க வேண்டியதில்லை. தொற்றுக்கான அறிகுறி தோன்றினால் மட்டும் பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) ஐ அழைக்கவும். உங்களுக்கு அவசர மருத்துவ உதவி தேவைப்பட்டால் எண் 911 ஐ அழைக்கவும். .

சமுதாயத்தில் பொதுவாக ஏற்படக்கூடிய தொற்றுப்பரவலைக் காட்டிலும், பொதுப் போக்குவரத்து சேவையின் பேருந்தில் எந்த வித கூடுதல் ஆபத்தும் இல்லை என பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) சுட்டிக்காட்டுகிறது.

கடந்த மாதத்தில், ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது அனைத்து பணியாளர்களையும் அவரவர் இருக்கும் பகுதியில் கோவிட்-19 தொற்றுக்காக சோதித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டது. சோதனை செய்துகொள்வதற்கான கூடுதல் வசதிகளை அளிக்க ஒன்ட்டேரியோ அரசாங்கம் முடிவு செய்ததின் பேரில், இந்தச் சோதனையை செய்துகொள்வதாகக் கேட்டுக்கொள்ளும் தனி நபர்களுக்கும் இந்த வசதியை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

வரும் வாரங்களில், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிர்வாகமானது, தனது அனைத்து வசதியமைப்புக் கட்டிடங்களிலும் அங்கங்கேயே சோதித்துக்கொள்ளும் வசதி ஏற்படுத்தவிருக்கிறார்கள் மற்றும் அனைத்து பணியாளர்களையும் தாமாக முன்வந்து சோதித்துக்கொள்ள உற்சாகப்படுத்துவதை தொடர்ந்து செய்வார்கள்.

நகரமானது படிப்படியாக மீண்டும் திறக்கையில், தனது பணியாளர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் சமுதாயத்தினரை கோவிட்-19 தொற்று பரவலுக்கு ஆட்படுவதற்கு எதிராக, தேவைப்படும் ஒவ்வொரு நடவடிக்கையையும் நகர நிர்வாகம் எடுத்து வருகிறது.

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பெரும்பாலான பேருந்துகளில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின்பேரில், குறிப்பாக உடல் ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பது ஒரு சவாலான விஷயம் எனும் இடங்களில் ஒவ்வொருவரும் மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணியுமாறு நகர நிர்வாகம் வலியுறுத்துகிறது. முகக் கவசம் அணிந்திருந்தாலும் கூட, பேருந்துகள், முனையங்கள் மற்றும் பஸ் நிறுத்தங்களில் பயணிகள் ஒருவருக்கொருவர் குறைந்தது 2 மீட்டர் (6 அடி) இடைவெளி விட்டு தொடர்ந்து உடல் ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிக்குமாறு நகர நிர்வாகம் பயணிகளைக் கேட்டுக்கொள்கிறது. பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக இதுபோன்ற கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் மற்றும் இருமுதல், தும்முதலின்போது தங்கள் முழங்கைகளில் முகம் புதைத்து இருமவோ தும்மவோ செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஜூலை 2 ஆம் தேதி வியாழக்கிழமை துவங்கி பேருந்துக் கட்டணம் செலுத்துதல் மற்றும் முன் வாசல் வழியாக பேருந்தில் ஏறுதல் ஆகியவை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும். பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கம் ஆகியவற்றின் கண்டிப்பான பரிந்துரையின் பேரில் பொதுப் போக்குவரத்து பேருந்து பயணிகள் முகக் கவசம் அணிவது கட்டாயம் என்பதால், பயணிகள் பேருந்துகளிலும் பேருந்து முனையங்களிலும் இருக்கும்போது மருத்துவம்-அல்லாத முகக் கவசம் அணிவது ஜூலை 2 ஆம் தேதி முதல் கட்டாயமாகும்.

முகக் கவசம் அணிவது கட்டாயம் எனும்போது, இளம் குழந்தைகளும் முகக் கவசம் அணிய இயலாத மாற்றுத்திறனாளிகள் மற்றும் இதர மருத்துவ நிலைமை கொண்டவர்கள் இதை அணியத் தேவையில்லை.

ஆபத்துக்களைத் தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாக செயல்படுகிறது. வழக்கமான புதுப்பிப்புகளுக்கு www.brampton.ca/covid19 ஐப் பார்வையிடவும், www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது சேவை புதுப்பிப்புகளுக்காக ட்விட்டரில் @bramptontransit ஐப் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பின் தொடர்பு மையத்தை 906.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca